தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு - புத்தொழில் உருவாக்கு நிறுவன நிர்வாக அலுவலகம்!

● இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 4 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, கிண்டியில் TNRISE தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தை திறந்து வைத்து, TNRISE இலட்சினையை (Logo) வெளியிட்டு, TNRISE இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, இன்று, மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இச்சிறப்புமிகு நிறுவனத்தின் துணை நிறுவனமான வாழ்ந்து காட்டுவோம் 2.0 திட்டம் (ஊரகப் புத்தாக்கத் திட்டம்) ஊரகப் பகுதிகளில் கிராமப்புறத் தொழில்களை ஊக்குவித்தல், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல், மகளிர் தொழில் முனைவோர் மூலம் கிராமப்புறங்களில் தொழில் உருவாக்குதல் ஆகியவற்றை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

பெண் தொழில் முனைவோர், நிதி, சந்தைகள், தொழில் தொடர்புகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை எளிதாக பெறுவதற்கு பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. "மகளிர் தொழில் முனைவோர் இந்த சவால்களை எதிர்கொள்ள, அவர்களுக்கென பிரத்யேக "புத்தொழில் இயக்கம்" ஒன்றை தமிழ்நாடு அரசு உருவாக்கும் எனவும், இந்த இயக்கம் மகளிர் தொழில் முனைவோருக்கு அவர்களின் தொழில் சார்ந்த அனைத்து அம்சங்களிலும் தேவையான மேம்பட்ட உதவிகளை வழங்கும்" எனவும் சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (02.07.2024) சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் TNRISE தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தை திறந்து வைத்து, TNRISE திட்டத் தினை தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து TNRISE இலட்சினையை (Logo) வெளியிட்டு, இணையதளத்தையும் (www.tnrise.co.in) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.07.2024) சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் "TNRISE" தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர்/ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி. ஸ்ரேயா பி.சிங், சமிக்கந்தர்தாஸ் (Task Team Leader, The World Bank) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள அலுவலகத்தில் அனைத்து நவீன வசதிகளையும் உள்ளடக்கிய வகையில் கலை நயத்துடன் மகளிர் தொழில் முனைவோருக்கு தேவையான பிரத்யேக வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மையம், தற்போதுள்ள தொழில் காப்பு மையங்களை (Business Incubation Centers) எளிதில் அணுக இயலாத ஊரக, நகர்ப்புற மகளிர் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான உயர் நிலை சேவைகளை வழங்குவதன் மூலம் மாநிலத்தின் தொழில் வணிக சூழலில் மகளிர் தொழில் முனைவோருக்கும் மற்ற தொழில் முனைவோருக்கும் உள்ள இடைவெளியை குறைக்கும் வகையில் செயல்படும்.

ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கான மகளிர் தொழில் முனைவோர் மற்றும் மகளிர் தொழில் குழுக்கள் இம்மையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பயன் பெற இருக்கின்றனர். மேலும் இத்தகைய தொழில் முனைவோருக்கு வழிகாட்டவும், தேவையான சேவைகளை வழங்கவும் தமிழகத்தில் மட்டுமின்றி உலக அளவில் பிரசித்தி பெற்ற Flipkart, HP, SICCI, StartupTN மற்றும் பல நிறுவனங்களுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் இன்றைய தினம் TNRISE நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்ய தர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி ஸ்ரேயா பி.சிங், சமிக் சுந்தர் தாஸ் (Task Team Leader, The World Bank), முதன்மைச் செயல் அலுவலர் திருமதி உமா மகேஸ்வரி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பழங்குடியின மலைவாழ் மக்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்!

கொல்லிமலை பகுதியில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையம் அமைத்திடுக!

பேரவையில் சேந்தமங்கலம் - கே.பொன்னுசாமி கோரிக்கை!

சென்னை, ஜூலை 4- சட்டப் பேரவையில் சேந்தமங்கலம் தொகுதி உறுப்பினர் கே.பொன்னுசாமி பேசுகையில் கொல்லிமலை பகுதியில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையம் அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

பேரவையில் உறுப்பினர் கே.பொன்னுசாமி பேசியதாவது:

2024-2025 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றம் பழங்குடியினர் நலத் துறையின் மானிய கோரிக்கையின்மீது இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழ்ந்து கொண்டிருக்கும் தமிழகத்தை, முதல் மாநிலமாக கொண்டு வருவதற்கு, தன்னை அர்ப்பணித்து பணியாற்றிக்கொண்டிருக்கும், 40-க்கு 40 தொகுதிகளிலும் வெற்றிகளைப் பெற்று, மூன்று ஆண்டு காலங்களில் செய்த சாதனை திட்டங்களை வைத்து மக்கள் அங்கீகாரம் வழங்கி இருக்கின்ற, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களை நான் வணங்குகிறேன். தமிழகத்தினுடைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நான் வணங்குகிறேன்.

கழகத்தின் பொதுச் செயலாளர், அவை முன்னவர் நீர் வளத் துறை அமைச்சர் அவர்களை நான் வணங்குகிறேன். அனைத்து அமைச்சர் பெருமக்களையும், அரசு தலைமைக் கொறடா, பேரவைத் துணைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் அனைவரையும், வனத் துறை அமைச்சர் அவர்களையும், மாநிலங்களவை உறுப்பினர் எங்களுடைய மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் கே.ஏர். என்.ராஜேஷ்குமார் அவர்களையும், சேந்தமங்கலம் தொகுதியுனுடைய வாக்காளர்களையும் நான் வணங்குகிறேன்.

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரவு வான் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற எங்களுடைய வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் நிலப்பரப்பில் 3-ல் 2 பங்கு அதாவது 33 சதவிகிதம் வனப்பகுதிகள் உள்ளன. அதனை பாதுகாப்பாக வைத்திருப்பது பழங்குடியின மக்கள்தான். பழங்குடிகள் இல்லையென்றால் நமது காடுகளுக்கும் பாதுகாப்பு இல்லை. சமதள மக்களால் காடுகளை பாதுகாக்கவோ, மீள் உருவாக்கம் செய்யவோ முடியாது. பழங்குடிகள் துணையின்றி அடர்ந்த காடுகளுக்குள் வழயறிந்து செல்லக்கூட முடியாது. பழங்குடியினர் காடுகளை அவர்களுடைய தேவைக்கு பயன்படுத்துகிறார்கள். ஆனால், பழங்குடியினர்களால்தான் காடுகள் அழிகிறது, விலங்குகள் வேட்டையாடப்பட்டு முற்றிலும் அழிகிறது, மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிகிறது, காட்டுத் தீ பரவுகிறது என்பதெல்லாம் ஏற்புடையதல்ல, உண்மையுமல்ல. நமது காடுகள் செழிப்பாக பாதுகாப்பாக இருப்பதற்கு பழங்குடியினர்கள்தான் காரணம் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசின் பழங்குடியினர் நலத் துறையின் சிறப்பான செயல்பாட்டின் காரணமாகத்தான் 90 சதவிகிதத்திற்கும் மேலான பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 95 சதவிகிதத்திற்கும் அதிகமான தேர்ச்சி சதவிகிதத்தையும், குறிப்பாக 10 ஆம் வகுப்புத் தேர்வில் 28 பள்ளிகளும் 12 ஆம் வகுப்புத் தேர்வில் 14 பள்ளிகளும் 100 சதவிகிதம் தேர்ச்சி அடைந்திருக்கிறது என்று கூறினால், அது நம்முடைய திராவிட மாடல் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியில் என்பதை நான் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். அதிலும், குறிப்பாக சொல்லவேண்டுமென்று சொன்னால், கொல்லிமலையில் கல்வி என்பது எட்டாத கனியாகத்தான் இருந்தது. ஆனால், இப்பொழுது நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு முறை ஆய்வுக்கு சென்று, ஆய்வு செய்ததன் பயனாகவும், நானும் தொடர்ந்து ஆய்வுக்கு செல்கின்ற காரணத்தினால்தான், கொல்லிமலையில் இரண்டு மேல்நிலைப் பள்ளிகளில் 100 சதவிகிதம் பழங்குடியினர் நலத் துறையின்மூலமாக தேர்ச்சியடைந்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், 540 மதிப் பெண்களை கொல்லிமலையிலே மலைவாழ் மக்களுடைய பழங்குடியினர் நலத் துறையின் வாயிலாக எடுத்திருக்கிறார்கள். துறையினுடைய அதிகாரிகளும் அதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.

பழங்குடியினர் நலத் துறை பள்ளிகளில் திராவிட மாடல் ஆட்சியின் சிறந்த முன்னெடுப்பாக அறிவுத் திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டு, தேர்ந்த ஆசிரியர்கள்மூலம் இணையவழியில் உயர் கல்விக்கான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதன் பயனாகத்தான், கடந்த ஆண்டு 12 பழங்குடியின மாணாக்கர்கள், அகில இந்திய அளவிலான நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்று, திருச்சி தேசிய தொழில்நுட்ப நிறுவனம், தஞ்சாவூர் தேசிய உணவு தொழில்நுட்ப நிறுவனம், மருத்துவக் கல்லூரி மற்றும் தேசிய பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்தர கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளார்கள்.

கடந்த ஆண்டின் முத்தாய்ப்பான சாதனைகளின் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் பழங்குடியினர் நலத் துறை பள்ளிகளில் பயின்ற பழங்குடியின மாணாக்கர்கள் அகில இந்திய அளவில் முதன் முதலாக தேசிய உடையலங்கார தொழில்நுட்பக் கல்லூரி, தரமணி, தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சி ஆகியவற்றில் சேர்க்கை பெற்றுள்ளார்கள். திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பான மற்றும் தனித்த கவனத்தின் வாயிலாக பழங்குடியினர் நலத் துறை அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவிகளை சேர்ப்பதற்கு பெற்றோர்களிடம் ஆர்வம் அதிகரித்துள்ளதன் காரணமாக, மாணாக்கர்களுடைய சேர்க்கை 20 சதவிகிதத்திற்கு மேலாக உயர்ந்துள்ளது. திராவிட மாடல் அரசின் இந்த முத்தாய்ப்பான சாதனையானது ஆரம்பம் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பழங்குடியின மாணாக்கர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளில், அவர்தம் எதிர்கால இலக்கினை அடையாளம் காணும்பொருட்டு, பல்வேறு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதுதவிர, படித்து வேலையில்லாமல் பல்வேறு இடங்களில் இருந்த மாணவர்களை அவர்களது வீடுகளுக்கே சென்று விவரங்களைப் பெற்று, தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பசாரா பிரிவுகளில் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு, பல்வேறு தனியார் நிறுவனங்களில் 148 நபர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்பட்டுள்ளது. இந்நிகழ்வு இத்துறையின் சிறப்பான சாதனையாகும். இம்முயற்சி பல்வேறு இடங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, மேலும் அதிக எண்ணிக்கையிலான படித்த வேலையில்லாத பழங்குடியின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, அகில அளவில் புகழ் பெற்ற இந்திய தோட்டக் கலை ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், தேசிய மீன் வள மரபணு பேணகம், இந்திய சிறுதானிய ஆராய்ச்சி நிறுவனம், மத்திய வேளாண் பொறியியல் நிறுவனம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய அரசு சார்ந்த நிறுவனங்களின் ஒன்றிணைக்கப்பட்ட தொல்குடி வாழ்வாதார முன்னெடுப்புத் திட்டத்துடன், பழங்குடியின மக்கள் மூலம் சேகரிக்கப்படும் சிறு வன விளை பொருள்களுக்கான விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டு, விற்பனை செய்வதற்கான தனி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, ஒன்றிணைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வன உரிமைக் குழுக்கள் மூலம் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல தனி வட்டாட்சியர் கள ஆய்வு செய்து ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரும் வனத் துறையினரால் மேற்படி நிலங்களுக்கு பட்டா வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்து, உடனடியாக பட்டா வழங்கப்பட வேண்டும்.

பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் மாணாக்கர்களுக்கு வழங்கும் உணவுப் பொருட்களின் அளவு விகிதாச்சாரம் ஒரே அளவில் இல்லாமல், வகுப்பிற்கு ஏற்றாற்போல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வன விலங்குகளால் தாக்குதலுக்குள்ளாகி பாதிக்கப்படும் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்குவதுடன், வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்விதமாக வேலைவாய்ப்பில் தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

வன உரிமைச் சட்டம், 2006-ன்படி பழங்குடியின மக்கள் வாழும் மலைகளிலும், மலைசார்ந்த பகுதிகளிலும் வன உரிமைக் குழுக்களை வெளிப்படை த்தன்மையோடு அனைத்துக் கிராமங்களிலும் ஏற்படுத்த வேண்டும்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் பழங்குடியின மலைவாழ் மக்கள் அதிகளவில் வசித்து வருகிறார்கள். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்விதமாக, மற்றும் கலாசாரத்தை பாதுகாக்க கொல்லிமலை பகுதியை மையமாகக் கொண்டு பழங்குடியினர் துணை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலுள்ள ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதியிலுள்ள பழங்குடியினர் மாணவ, மாணவிகளின் உயர் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கவும், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தவும், புதியதாக அரசு பழங்குடியினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டும். பழங்குடியின மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் புதியதாக பழங்குடியின மகளிர் தொழில் பூங்கா தொடங்குதல் வேண்டும்.

பழங்குடியின மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் விலையும் சிறுவன மகசூல் மற்றும் சிறு தானிய பொருட்களை விற்பனை செய்யும் வகையில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் சுற்றுலா இடங்களில் சிறுவன மகசூல் சிறுதானிய பல் பொருள் அங்காடி தொடங்குதல் வேண்டும்.

பழங்குடியின மக்களின் நிலங்களை பழங்குடி அல்லாதவர்களின் பெயரில் பட்டா மாற்றம் பத்திர பதிவு செய்து வருவதை தடை செய்ய வேண்டும். அரசு ஏற்கெனவே அமல்படுத்தியுள்ள வருவாய்த் துறை நிலை ஆணை எண் 1540 அரசாணையை அனைத்து சார் பதிவாளர் அலுவலகத்திலும் அறிவிப்பு பலகையாக வைத்து அமல்படுத்த வேண்டும்.

மலை பகுதிகளில் தரிசு நிலங்களில் பயிர் செய்யும் பழங்குடி மக்களுக்கு அரசாணை எண் 1168-ல் விலக்கு அளித்து பட்டா வழங்க வேண்டும்.

பழங்குடியின மக்களுக்கு வேலை வாய்ப்பிலும் கல்வியிலும் 1 % இட ஒதுக்கீட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் வழங்கினார். வேலைவாய்ப்பிலும் 50-க்கும் குறைவான பணியாளர்களை அறிவிக்கும் போது, பழங்குடியின மக்களுக்கு அப்பணிகளில் வாய்ப்பு கிடைக்காமல் போகின்றது. ஆதலால் 50-க்கும் குறைவான வேலை வாய்ப்பு வழங்கும்போது, அந்த இட ஒதுக்கீட்டிலும் பழங்குடியினர் மக்களுக்கு வாய்ப்பளித்தால் மிகவும் பயனடைவார்கள் என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாதந்தோறும் ஆய்வுக்குச் செல்ல வேண்டும். அப்படி ஆய்வுக்குச் செல்கின்றபோது, மாவட்ட வன அலுவலர் அவர்களையும் ஆய்வுக்கு அழைத்து செல்ல வேண்டும். இதனால் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் மற்றும் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் வீட்டு வசதி கழகம் உள்ளதுபோல், பழங்குடியினருக்கும் நிதியுதவி அளிக்கும் தனி அமைப்பாக Scheduled Tribes Finance and Development Corporation அமைத்துக் கொடுக்க வேண்டும்.

பழங்குடி சட்டமன்ற உறுப்பினர் ஒரே ஒருவர், நான் மட்டும்தான் தற்போது இருக்கிறேன். காரவள்ளி வனப்பகுதி நுழைவு வாயிலில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் வனத் துறையின் மூலமாக வனவியல் பூங்கா அமைக்கவும் மற்றும் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி, காரவள்ளி வனக் காப்புக் காட்டில் உள்ள மூங்கில் மரங்களை அகற்றிவிட்டு நீர் வளமுள்ள மரங்களை நடவு செய்ய வனத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை பகுதியில் மிளகு, காபி, மரவள்ளி போன்ற விலை பொருட்களுக்கான கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உழவர் சந்தை அமைக்கவும் மற்றும் சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உள்ள கலைக் கல்லூரி அருகில் அரசுக்குச் சொந்தமான இடம் உள்ளது. அந்த இடத்தில் தோட்டக் கலைத் துறை மூலமாக பழப் பண்ணை அமைக்க ஆவன செய்யுமாறு இந்த மாமன்றத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கோரிக்கைகளையெல்லாம் இந்த அவையில் படித்ததாகக் கருதி அனைத்திற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்

கொல்லிமலை பகுதியில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்.

எருமப்பட்டி ஒன்றியத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்த வேண்டும்.

தோ. ஜேடர்பாளையம் பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கை வசதியுடன் மேம்படுத்தி விரிவுபடுத்த வேண்டும்.

செங்கரையில் உள்ள காவல் நிலையத்திற்கு புதிதாக கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சேந்தமங்கலம் தொகுதி, தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

கொல்லிமலை பகுதியில் புதிய பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தர வேண்டும்.

கொல்லிமலை பகுதியில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்.

கொல்லிமலை ஒன்றியம், தெம்பலம் லேம்ப் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதியதாக கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சேந்தமங்கலம் ஒன்றியம், புதிதாக கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும்.

லேம்ப் சொசைட்டிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை வட்டி மானியத் தொகையினை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து லேம்ப் சொசைட்டிகளுக்கான அலுவலகம், நியாய விலைக் கடை மற்றும் உரக் கிடங்கு ஆகியவை மலைப் பகுதிகளில் உள்ள சீதோஷண நிலை காரணமாக பழுதடைந்துள்ளதால், பழங்குடியினர் நலத் துறையின்மூலம் முழு மானியத்தில் புதிய கட்டடங்களை கட்டித் தர வேண்டும்.

லேம்ப் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்படும் மத்திய கால கடன்களுக்கு வரும் வட்டி மானியத் தொகையினை அந்தந்த ஆண்டு வழங்கி சங்கங்கள் மேம்பட ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு உறுப்பினர் கே.பொன்னுசாமி பேசினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம். கிருஷ்ணன்

ஜூலை 4 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

மாதவரத்தில் நாற்பது ஆண்டுகள் வட்டச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.